**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வரலாறு- தரம் 10 / மூன்றாம் தவணை - வாரம் - 5**

**தயாரிப்பு : திருமதி.S.சுஜிதா ( கே / தெஹி / களனி த.வி )**

01)பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1.யாழ்ப்பாணத்து இராச்சியத்தின் ஆரம்பம், வரலாறு பற்றி அறிய உதவும் மூன்று நூல்கள் எவை?

2.யாழ்ப்பாண வைபவ மாலை எத்தனையாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது?

3.யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன் யார்?

4.யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் எத்தனை பேர்?அவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

5.வன்னி எனப்படும் சிறிய ஆட்சி அலகுகள் எவ்வாறு தோன்றின?அவற்றின் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

6.தம்பதெனிய இராசதானியை உருவாக்கிய மூன்றாம் விஜயபாகு மன்னனும் வன்னித் தலைவனாக செயற்பட்டான் என்பதைக் குறிப்பிடும் நூல் எது?

7.ஈரவலயம் நோக்கி புலம்பெயர்ந்த மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

8.தெடிகம பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற தொல்பொருட்கள் எதற்கு சான்றுபகர்கின்றன?

9.குருநாகல் விபரம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாது?

10.இரண்டாம் நகரமயமாக்கத்தின் போது காணப்பட்ட சமய நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

11.இரண்டாம் நகரமயமாக்கத்தின் போது கலை கட்டிட நிர்மாணிப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களில் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

12. “கலிகால சாகித்திய பண்டித” என்றபட்டப் பெயரைக் கொண்ட மன்னன் யார்?

13.தம்பதெனிய காலத்தில் எழுதப்பட்ட சிறந்த உரைநடை நூல்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றை எழுதிய ஆசிரியர்களையும் குறிப்பிடுக.

14.தம்பதெனி காலத்தில் எழுதப்பட்ட சிங்கள இலக்கணம் , இலக்கண விதிகள் பற்றிய நூல்களையும் குறிப்பிடுக.

15.தம்பதெனியா “கதிகாவத்த” என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் யாது?

16.இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் தினசரி நடவடிக்கைகளை உள்ளடக்கி எழுதப்பட்ட நூல் எது?

17.தம்பதெனிய காலத்தில் எழுதப்பட்ட சிறந்த வைத்திய நூலைக் குறிப்பிட்டு , அந்நூலை எழுதியவரையும் குறிப்பிடுக.

18.தம்பதெனிய காலத்தில் பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்களைக் குறிப்பிடுக.

19.குருணாகலைக் காலப்பகுதியில் எழுதப்பட்ட நூல்களைக் குறிப்பிடுக.

20.கம்பளைக் காலத்தில் எழுதப்பட்டுள்ள நூல்களை பின்வரும் அடிப்படையில் குறிப்பிடுக.

1.தூது காவியங்கள் -

2.பாளி மொழி நூல்கள் -

3.சிங்கள மொழி நூல் -

21.சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் இராசதானி யாது?

22.கோட்டை யுகத்தில் இலக்கிய பணிபுரிந்த மூன்று பண்டிதர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

23.கோட்டை யுகத்தில் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

24.கோட்டை யுகத்தில் எழுதப்பட்ட தூது காவியங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

25.கோட்டை யுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரிவெனாக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

02.வரலாற்று ரீதியிலான முதலாம்இ இரண்டாம் ஆட்சி நிலையங்களான பின்வரும் இடங்களை இலங்கை புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

(அநுராதபுர நகரம், பொலன்னறுவை நகரம் ,தம்பதெனிய ,யாப்பகுவ ,குருணாகல் , கோட்டை, கம்பளை )

03.பின்வரும் இராசதானிகள் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டிட நிர்மாணிப்புக்கள் தொடர்பான படங்களை தேடி ஒட்டி அந் நிர்மாணிப்புக்கள் தொடர்பாக ஐந்து ஐந்து வினாக்கள் தயாரித்து விடைகளுடன் தருக.

1.யாப்பகுவ இராசதானி – சுபபவ்பத / இரண்டாவது சிகிரியா

2.கம்பளை இராசதானி – லங்காதிலக விகாரை , கடலாதெனிய விகாரை , அம்பக்கே மரசெதுக்கல்